# காலனிய யாழ்ப்பாணத்தில் சுதேச உயர்குழாமினர்: மரபும், உருமாற்றமும் பற்றிய ஒரு வரலாற்றுச் சமூகவியல் பார்வை

**இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன்**

**ஆய்வுச்சுருக்கம்**

*சமூகவியல் ஆய்வுகளில் வரலாற்றுச் சமூகவியற் புலம் சார்ந்த ஆய்வுகள் தனித்துவம் மிக்கவையாக விளங்குகின்றன. வரலாற்றுச் சமூகவியல் ஆய்வுகள் ஒரு குறித்த காலகட்டத்தின் சமூகத்தின் இயக்கம் மற்றும் அசைவியக்கத்தின் போக்குகளை வெளிக்கொணர்கின்றன. இந்த ஆய்வும் ஒரு வரலாற்றுச் சமூகவியல் ஆய்வாக அமைவதால் இலங்கையில் காலனித்துவ காலத்தில் நிகழ்ந்த சமூக உருமாற்றம் ஒன்றினை வெளிக்கொணர்கிறது. இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காலனிய ஆட்சியின்போது சுதேச உயர்குழாமினராக விளங்கிய முதலியார்களிடத்தில் நிலவிய மரபார்ந்த அம்சங்களில் ஏற்பட்ட உருமாற்றங்களை சமூகவியல் கோட்பாடுகளின் பின்புலத்தில் ஆய்வுசெய்கின்றது. அத்துடன் காலனித்துவ காலத்தில் சுதேச உயர்குழாமின் உருவாக்கத்திற்குப் பின்புலமான காரணங்கள் குறித்தும் விளக்குகின்றது. உயர்குழாம் உருவாக்கம் தொடர்பான சமூகவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் வரலாற்று நூல்கள் முன்னைய ஆய்வுத்தகவல்கள் என்பவற்றின் துணையுடன் யாழ்ப்பாணத்தில் சுதேச உயர்குழாமின் உருமாற்றம் சமூக உருமாற்றத்தின் ஒரு கூறாக விளக்கப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள் :** சுதேச உயர்குழாமினர், முதலாளித்துவ தர்க்க நிலை, ஏறுநிரல் கட்டமைப்பு, உயர்குழாமினர், காலனித்துவ அதிகாரம்

ஒரு சமூகத்தில் அதிகாரம், பொருளாதார பலம், சமூக அந்தஸ்து, மரபுரிமைகள், பதவி நிலைகள், அரசியல் செல்வாக்கு, கல்வி அறிவு முதலியவற்றின் துணையுடன் உயர்குழாம் உருவாக்கம் நிகழ்வது ஒரு பொதுவான செயன்முறையாகும். இந்த உயர்குழாமினர் பிரதேச பண்பாட்டு அம்சங்களால் வேறுபடுகின்றனர். எனினும் அவர்களின் பண்புகள் உலகப் பொதுநிலைக்குரியவை. உயர்குழாமினரின் உருவாக்கத்திற்குப் பின்புலமான காரணிகள், அவர்களின் சமூக முதன்மை என்பன குறித்து விரிவாக ஆராயப்பட வேண்டிய தேவை உள்ளது. வரலாற்றுச் சமூகவியல் (historical sociology) அடிப்படைகளில் நின்று இத்தகைய உயர்குழாமினரை ஆய்வு செய்வது மிகவும் அவசியமான ஒரு சமூக வரலாற்று ஆய்வுத் தேவையாகின்றது.

வரலாற்றுச் சமூகவியலில் ஆய்வுகளை மேற்கொள்கின்றபோது அதற்கான முறையியல்களும்தரவு சேகரித்தலுக்கானவழிமுறைகளும் வரலாற்று நிலைப்பட்டவையாகவே அமைகின்றன. ஒரு காலவோட்டத்தின் பதிவுகளுக்கூடான விவரணப் பகுப்பாய்வு இன்றியமையாததாகின்றது. இங்கு பின்காலனிய சமூக மாற்றத்தினை விளங்கிக் கொள்வதற்காக காலனியத்தின் முன், பின்னான ஓர் ஒப்பியல் நோக்கினை மேற்கொள்வதற்காக வரலாற்றுப் பதிவுகள் தகவல் மூலங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. அவ் வரலாற்றுத் தகவல்களை காலனிய மற்றும் பின்காலனிய சமூக உருமாற்றம் தொடர்பான சமூகவியல் கோட்பாட்டு விளக்கங்களின் அடிப்படையில் புரிந்துகொள்ள முனைகின்றது.

உயர்குழாமினரின் இயல்புகளை விளக்க முனைந்த ஹாரல்ட்.டீ.லாஸ்வெல் 1952 இல் இதுபற்றி எழுதும் போது "ஒரு குறிக்கப்பட்ட சமூகத்தில் உயர் தகுதி நிலையினை உடையவர்களென வகுக்கத்தக்க, விவரிக்கத்தக்க தகுதிநிலை அளிக்கத்தக்கவர்கள் உயர்குழாமினர் என எண்ணக்கருப்படுத்தப்படுகின்றனர். அவர்களின் விழுமியங்களுக்கு அமைவாக பல்வகைப்படுவர். அதிகார உயர்குழாமினருக்கு (அரசியல் உயர்குழாம்) அப்பால் செல்வம், மதிப்பு, அறிவு (பெயரிடத்தக்க ஆனால் சொற்ப) சார்பான உயர்குழாமினரும் உளர். லாஸ்வெல்லினால் கூறப்பட்ட இந்த உயர்குழாம் விழுமியங்கள் அண்மையில் மேலும் எட்டுவகைப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக அதிகாரம், அறிவெழுச்சி, செல்வநிலை, நன்னிலை, (சுகநலம், பாதுகாப்பு மற்றும் மனிதனின் சௌகரிய நிலை) திறன், கவர்ச்சி/ ஈர்ப்பு, மதிப்பு மற்றும் நேர்மைஎன்பவை"[1] என்று குறிப்பிடுகின்றார். இவர் மேலும்தன்கருத்தினை விளக்குகையில், உயர்குழாம் சமூகக் கட்டமைப்பானது அதன் அடிப்படை விழுமியங்களை மாத்திரம் பிரதிபலிப்பதில்லை. அத்துடன் சமூகம் ஒன்றின் தீர்மானம் எடுத்தல் செயன்முறை மற்றும் அதிகாரக் கட்டமைப்பினைத் திடமாக வெளிப்படுத்துதல் என்பவற்றை நோக்கி அந்த அடிப்படை விழுமியங்களை விரிவுபடுத்தும் என்றார். இந்த விழுமியங்களின் ஒரு வகைமையாகத்தான் சமூகத்தின் தலைமைத்துவம் உருவாகின்றது. இந்தப் போக்கில் தான் தலைமைத்துவம் தெரிவுசெய்யப்படுகின்றது. அத் தலைமைத்துவம் சமூகத்தின் உயிர்மூச்சின் அடித்தளத்திலிருந்து தேர்வு செய்யப்படுகின்றது. இதனால் தான் தீர்மானம் எடுத்தலுக்கான அதிகார[20] செயற்படுத்தப்படுகின்றது. இக்கருத்தின் வழியே ஒரு சமூகத்தின் தலைமைத்துவம் உயர்குழாம் விழுமியங்களின் வழியாக எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றது என்பதை புரிந்து கொள்ளலாம்.

மரபுசார்ந்த சமூகம் ஒன்று விழுமிய கட்டமைப்பில் ஒருமுகத்தன்மை உடையதாக அமையும். அத்தகைய சமூகங்கள் மரபார்ந்த வகையில் மூடப்பட்டவை என்பதால் அதனுள் சொற்ப விசேடத்தத்துவங்களே (specialization) அமையும். இதனால் அந்த சமூகத்தின் உயர்குழாமினரிடையே அதிகளவு வகைமைகளோ அல்லது வேறுபட்ட மட்டங்களோ அமைவதில்லை. அந்த சமூகங்களின் உயர்குழாமினர் மூடப்பட்ட குழுவினராக விளங்குவர். அவர்களின் அந்தஸ்து மரபினால் வழிவந்த அந்தஸ்தாக (ascribed status) அமையும். இந்த அந்தஸ்து பிறப்பு, இரத்த உறவு மற்றும் வயதினால் வழிவந்ததாக அமையும். இது அவர்களிடத்தே ஒரு பிரபுத்துவப் போக்கினை உருவாக்கும். அவர்களில் ஒரு பகுதியினர் மாத்திரமே வியாபாரம், வணிகம் போன்ற வேறு தொழில்களுக்குச் செல்கின்றனர். மரபார்ந்த உயர்குழாமினரின் உலக நோக்கானது மறைபொருள் பற்றிய தேடலிலும் தத்துவார்த்த இலட்சியத்திலும் வேரூன்றியுள்ளது. இவர்களிடம் கைவினைத் தொழில்நுட்ப வேலைகள் தொடர்பான அலட்சியப் போக்கு உள்ளது. கைவினைத் தொழினுட்ப வேலைகள் குடியானவர்களுக்குரியதெனக் கருதுகின்றனர். இது சமூகத்தின் பொருள் சாராந்த மற்றும் தொழில்நுட்ப அம்சங்கள் தொடர்பான இவர்களின் சிந்தனைகளில் புத்தாக்கம் மற்றும் புனைவாக்கத்திலான தேக்கநிலைக்கு வழிசமைக்கின்றது. மரபார்ந்த சமூகங்களின் உயர்குழாமினர் உளவியல் ரீதியாக ஆக்கிரோசம் (aggressive) மற்றும் அந்தஸ்துசார் பதற்றநிலை (status anxiety) தொடர்பான ஆழவேரூன்றிய உணர்வுப் பீடிப்பு உள்ளவர்களாகவும் இருப்பர். இவர்களின் உளம்சார் நகர்ச்சித் தன்மைக்கும் (psychic mobility), பரிவுக்குமான (Empathy) திறன் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்[2].

யாழ்ப்பாணத்தில் இத்தகைய இயல்புகள் உள்ள நிலஉரிமை, அதிகாரம், அரசியல்பலம், பணபலம் உள்ள ஒரு உயர்குழாமினர் வாழ்ந்திருந்தனர். இவர்கள் சமூகத்தில் எவ்வாறு தொழிற்பட்டார்கள்? இவர்களின் சமூக அதிகாரங்கள் எவை? இவர்களிடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எத்தகையவை? இவர்களின் நிலைபேற்றுக்கும் மாற்றங்களுக்குமான பின்னணி விசைகள் எவை? என்பன குறித்து இந்தக் கட்டுரை தெளிவுபடுத்த முனைகின்றது.

யாழ்ப்பாணத்தில் 19ம் நூற்றாண்டின் முன்னர் தோன்றிய சுதேச உயர்குழாமினர் (native elites) பெரும்பாலும் அதிகார மையமாகவே தோன்றினர். அவர்கள் யாழ்ப்பாண மன்னர் காலத்தின் தொடர்ச்சியாக அமைந்தனர். இதனால் போத்துக்கேய மற்றும் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலங்களில் இவர்கள் நிர்வாக மற்றும் அரச கடமைகளில் அமர்த்தப்பட்டனர். அதிகார மையமான இந்த உயர்குழாமினரின் உதவியின்றி அவர்களின் ஆட்சி, நீதிபரிபாலனம், நிர்வாக ஒழுங்குகள் என்பவற்றைச் சரிவரச் செய்வியலாதிருந்தது. அதேநேரத்தில் இந்த உயர்குழாமினரில் சிலர் ஆட்சியாளர்களின் விசுவாசிகளாகவும் மாறிவிட்டனர். இதனால், அவர்களின் சமூக அந்தஸ்தும் உயர்நிலையும் தொடர்ந்துபேண வழி ஏற்பட்டது.

யாழ்ப்பாண சமூகத்தில் அன்றிருந்த முதலியார்கள், றெசிபுதோர்கள் (recebedore) கண்காணிகள், உடையர்கள், தலையாரிகள் போன்றவர்களும் அவர்களின் குடும்பங்களில் தோன்றியவர்களும் உயர்குழாமினராக விளங்கினர். இந்த உள்ளூர் உயர்குழாமினர் எந்தளவிற்கு ஆட்சியாளர்களுக்கு விசுவாசமாக இருந்தனரோ அந்தளவிற்கு ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டி கிளர்ச்சிகளைச் செய்யும் வலுவும் உடையவர்களாக இருந்தனர். இதனாற்றான் ஆட்சியாளர்கள் இவர்களுடன் இணங்கிப் போகும் நிலையில் இருந்தனர். பதவிநிலையினாலும் இவர்கள் சமூகத்தில் மேனிலை பெற்றிருந்தனர்.

போத்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தரின் நிர்வாகமுறை பழமையினைப் பின்பற்றியிருந்தது. சுதேசிகளின் ஆதரவுடன் செலவுகளின்றி அது தொடரப்பட்டது. அக்காலத்தில் 'அதிகாரி' என்று ஒரு பதவிநிலை இருந்தது. இருவகை அதிகாரிகள் காணப்பட்டனர். "அவர்களில் ஒருவகையினர் பிரதேசவாரியான நிர்வாகத்திலே தலைமைப் பதவியினையும் பொறுப்புக்களையும் கொண்டிருந்தனர். மற்றொரு வகையினர் சமூகப் பிரிவுகள் சிலவற்றோடு தொடர்புடைய பொறுப்புக்களைப் பெற்றிருந்தனர். தச்சர், கொல்லர், வண்ணார், நளவர், கைக்கோளர், கரையார் என்னும் சாதிப்பிரிவினரின் தலைவர்களாக அதிகாரிகள் இருந்தனர். அரசாங்கப் பொறுப்புக்களையும் அரசாங்கத்துக்கு அவர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய வரிகள், சேவைகள் என்பவற்றையும் கவனித்தல் அவர்களின் பொறுப்பாகும்."[3]

யாழ்ப்பாணத்தின் நிர்வாகத்தில் முதலியார் பதவி முக்கியமானது. சமுதாயச் செல்வாக்கு, அரச விசுவாசம், நிர்வாக அனுபவம் உள்ளவர்கள் முதலியார்களாக நியமிக்கப்பட்டனர். ஆட்சியாளர்கூட முதலியார்களின் ஆலோசனைகளைப் பெற்று வந்தனர். இலங்கைத் தமிழரிடையே 'முதலியார்கள்' பொதுநிர்வாகம், நீதிநிர்வாகம், இராணுவச் சேவைகளில் ஈடுபட்டிருந்தனர். 'றெசிபுதோர்' என்ற பதவி போத்துக்கேயர் காலத்திலிருந்து வழங்கி வந்துள்ளது. அரசாங்க வரிகளைச் சேகரிப்பவர்களாக இவர்கள் அமைந்தனர். இவர்கள் செல்வாக்குமிக்க குடும்பப் பின்னணியிலிருந்து தோன்றியவர்கள் இவர்களுடன் நெருங்கிய தொடர்புபட்ட பதவியாக 'பண்டாரப்பிள்ளைகள்' அமைந்தனர். இவர்கள் வரிசேகரிப்பதில் றெசிபுதோர்களுடன் சேர்ந்து பணியாற்றினர். 'கண்காணிகள்' இறைவரி நிர்வாகத்தில் பணிபுரிந்தனர். கிராமத்தலைவராகப் பணிபுரிந்த 'தலையாரி' யைவிட சற்று முக்கியம் வாய்ந்த பதவியாக 'உடையார்' பதவி அமைந்தது. உடையார்கள் களவு, கொள்ளைகளைத் தடுப்பது, அமைதியை நிலைநாட்டுதல், ஊரைக் காவல் செய்தல் முதலியவற்றைச் செய்தனர்.

இந்தப் பதவிநிலை ஒழுங்கமைப்பானது மேலிருந்துகீழான அதிகாரஒழுங்கமைப்புக்களுடன் இயங்கின. யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் ஐரோப்பியர் வருகைக்கு முந்தியே இவ்வாறான ஒரு ஒழுங்கமைப்பு நிலைபெற்றிருந்தது. நிர்வாக ஒழுங்கமைப்பில் இது முறைப்படுத்தப்பட்ட ஒரு பணிக்குழு (bureaucracy) அமைப்பாகத் தொழிற்பட்டிருந்தது. இப் பணிக்குழு அமைப்பு

எளிதான நிர்வாக ஒழுங்கைப் பேணுவதற்கு துணையானதுடன் அதிகாரத்தின் தொடர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்தது.

யாழ்ப்பாணத்தில் 19ம் நூற்றாண்டில் நிலவிய ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் ஒரு முதன்மையான உருமாற்ற காலமாகும் (transformative period) அக்காலத்தில் உருவான 'மத்தியதர வர்க்கம்' குறிப்பிடத்தக்கது. அவ்வாறே இலங்கை முழுவதும் ஒரு 'முதலாளித்துவத் தர்க்கநிலை' (capitalist rationality) யினைத் தன்னகத்தே கொண்ட உயர்குழாம்பிரிவினர்வளர்ச்சிபெற்றனர். அவ்வாறு வளர்ச்சி பெற்ற பிரிவினர்களில் முதலியார்கள் முக்கியமானவர்கள். இவர்களின் உருவாக்கம் மற்றும் எழுச்சி இலங்கையின் சமூக பண்பாட்டு வரலாற்றில் ஒரு முதன்மையான நிகழ்வாகும்.

முதலியார்கள் பொதுவாக நிலவுடைமையாளர்களாக இருந்தனர். இவர்கள் பிரித்தானியர்கள் உருவாக்கிய நிலவுடைமையாளர்கள். இவர்கள் ஆங்கில அரசுடன் அண்டியிருந்து பதவிகள், பட்டங்கள், அதிகாரங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொண்டவர்கள். இலங்கையில் முதலியார்கள் என்ற உயர்குழாமினர் பற்றி பலர் ஆய்வு செய்துள்ளனர். மைகல் றொபேட்ஸ் என்பவர் caste conflict and elite formation (1995) என்னும் ஆய்வினைச் செய்துள்ளார். அவ்வாறே குமாரி ஜெயவர்த்தனாவின் ஆய்வுகளில் Nobodies to Some bodies : The rise of colonial bourgeoisie in Sri Lanka என்ற ஆய்வில் முதலாளிவர்க்கமாக முதலியார்கள் குறித்து விளக்குகின்றார். இவ்வாறே Social change in nineteenth century Ceylon (1995) என்ற பற்றிக் பீபிள்ஸ் இன் ஆய்வு 19ம் நூற்றாண்டின் இலங்கையின் முதலியார்கள் குறித்து வெளிப்படுத்துகின்றது. இத்தகைய ஆய்வுகளில் பெரும்பாலானவை இலங்கையின் சிங்கள மக்களிடையே நிலவிய பிரதேசங்களில் உயர்குழாம் முதலியார்கள் தொடர்பாக விளங்குகின்றன.

'முதலியார்' என்ற சொல் (chieftain) ஒரு ஆதி திராவிடச்சொல். இது 'முதல்' என்ற சொல்லிருந்து வந்தது. சிங்களத்தில் 'முதலி பேருவா' என்பது முதலியார்களின் தொகுதியை அல்லது முதலியார் வர்க்கத்தினைக் குறிக்கின்றது. 'முடியான்சி' என்பது சிங்களத்தில் வழமையாக ஒரு தனிப்பட்ட முதலியாரையே குறிக்கின்றது. தென்னிந்தியாவில் முதலியார் என்பது குறித்த தமிழர்களின் சாதி ஒன்றுக்கான தனியாளை அடையாளப்படுத்தும் ஒரு பொதுப்பின்னொட்டாக அமையும்[4]. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் 'முதலியார்' என்பது ஒரு சாதிப்பெயராக அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ளது5. என்று குறிப்பிடுகின்ற போதிலும் யாழ்ப்பாணத்துச் சாதிய உயர்நிலை அதிகாரங்களின் உயர்நிலைப் பிரதிநிதிகளாக கல்வி, உத்தியோக வாய்ப்பில் உயர்நிலை வகித்தவர்களாக இவர்கள் விளங்கியிருந்தனர். பொதுவாக இவர்கள் தலைமைத்துவம், தீர்மானம் எடுக்கும் அதிகாரம், வழங்கப்பட்ட மதிப்பு, வழங்கப்பட்ட நன்னிலை, வழங்கப்பட்ட பாதுகாப்பு என்பவற்றை உள்ளடக்கியவர்களாக விளங்கினர்.

யாழ்ப்பாணத்தைத் தமிழ் அரசர்கள் ஆண்ட காலத்திலிருந்து வேளாள சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ராயன், அதிராயன், முதலி என்ற பட்டப்பெயர்கள் வழங்கிவந்தன. ராயன் என்ற தமிழ்ப்பெயரில் King என்ற ஆங்கிலப் பதத்தின் பொருள்அமைந்திருந்ததால்அவர்கள்கர்வமடைவர் எனக்கருதிப் போத்துக்கேயர் Don என்ற பெயரைச் சேர்த்துக் கொண்டனர். 19ம் நூற்றாண்டின் முன்னர் முதலியார்களின் கடமைகளென மேலே நோக்கப்பட்ட விடயங்களில் ஆங்கிலேயர் இந்த உயர்குழாமினருக்கு நைட் பட்டம், CMG பட்டம், முதலியார் பட்டம், சமாதான நீதிபதிப் பட்டம் என்பவற்றை வழங்கியிருந்தமை அந்தக்கால சமுதாயத்தின் அடுக்கமைப்பில் அவர்கள் பெற்ற இடத்தினைப் புலப்படுத்துகின்றது. சவரிமுத்து முதலியார், கனகரத்தினம் முதலியார், குமாரகுலசிங்க முதலியார், முருகேசப்பிள்ளை முதலியார், அரசர்கோன் முதலியார், உயரப்புலம் சின்னையாமுதலியார், இலங்கை நாயக முதலியார், ம. முத்துக்குமாரசாமி முதலியார், இராமலிங்க முதலியார், நாகலிங்க முதலியார் போன்றவர்களின் பெயர்கள் குறிப்பிடத்தக்கவை.

சமூதாயத்தின் அதிகாரம், கௌரவம், செல்வந்தநிலை என்பவற்றில் உயர்ந்தவர்களாக இவர்கள் விளங்கினர். பிரித்தானிய வர்த்தக நிறுவனங்களுடனும் காலனித்துவ அதிகாரத்துடனும் (colonial bureaucracy) உள்ள இணைப்பினால்[6] உருவான இலங்கையின் வர்த்தக முதலாளித்துவத்தினருடன் ஒப்பிடும்போது முதலியார்கள் பழம் பெருமைவாய்ந்த பணக்காரர்களாக விளங்கியிருந்தனர். இலங்கையில் வளர்ந்த வணிக முதலாளித்துவப் பிரிவினர் பெருந்தோட்டத்துறை, சாராய விற்பனை என்பவற்றால் உருவானவர்கள். ஆனால் முதலியார்கள் இந்த வணிக முதலாளித்துவத்துக்கு முன்பே செல்வாக்குமிக்க பிரிவினராக தோன்றிவிட்டனர்.

தமிழ்ச்சமூகத்திலும் சிங்களச்சமூகத்திலும் முதலியார்களின் வரலாறு மிகப்பழமை வாய்ந்தது. முதலியார்கள் பல கடமைக் கூறுகளைக் கொண்டவர்கள். வரிசேகரிப்பவர்க்கு உதவுதல், தகராறுகளை விசாரித்து நீதிவழங்குதல், தேச வழமைகளைப் பேணுதல், மாகாண நிலைமைகள் தொடர்பாக அதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பித்தல் போன்றன முக்கியமான சில கடமைகளாகும். இந்தக் கடமைகள்தான் அவர்களின் அதிகாரம் மற்றும் சமூக கௌரவத்திற்குக் காரணமாயின. இந்த அதிகாரங்கள் 19ம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே மரபுவழியாக வந்தவை. ஆயினும், 1833 இல் கோல்புறூக் கமரூன் சீர்திருத்தத்தின் விளைவாக அவர்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. "கோல்புறூக் கமரூன் சீர்திருத்தங்களின் முன்னர் பிரித்தானியர்கள் முதலியார்களைச் சிங்கள சமூகத்தின் சட்டபூர்வமான பிரதிநிதிகளாக அங்கீகரித்ததன் வழி அவர்களின் அதிகாரத்தினை மேம்படுத்தியிருந்தனர். 1833இன் பின்னர் இலங்கையில் நிலவிய பிரித்தானிய அரசு இந்த சட்டபூர்வ அங்கீகாரத்தினை வாபஸ் பெற்றது. எல்லாப் பொறுப்புக்களும் மறுக்கப்பட்டதுடன் மிகச்சாமானியர்களாகப் பார்க்கப்பட்டனர். கோல்புறூக் - கமரூன் சீர்திருத்தத்திற்குப் பின்னான சந்ததியில் முதலியார்கள் அலுவலராக இருந்து அடக்கி ஆளும் அதிகாரம் தொடர்ந்தது. ஆனால், அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்ட வேறுபாடுகள் குறைக்கப்பட்டன. முதலியார் பதவிக்கான போட்டியிடும் நிலை புதிய சமூகக் குழுவினருக்கும் திறந்து விடப்பட்டது. முதலியார்களில் ஒரு சிறுதொகையினர் உயர்குழாமினர் அல்லாதவர்களால் கௌரவமாக அபகரிக்கப்பட்டனர்[7] இக்கருத்தின்படி முதலியார் பதவி புதிய குழாமினருக்கு திறந்து விடப்பட்ட நிலைமை என்பது ஒரு முக்கியமான சமூக உரு மாற்றம் தான் எனினும், அந்தப் புதிய குழு என்பது கூட யாழ்ப்பாணத்தில் மாத்திரமின்றி ஏனைய இடங்களிலும்சாதி, பொருளாதாரம் மற்றும் சமயம் என்பவற்றினால் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மாத்திரமின்றி ஏனைய பிரதேசங்களிலும் முதலியார் வகுப்பினர் சாதிநிலையில்உயர்ந்தவர்கள். சாதிமுதலியார்களின் அதிகாரத்தினைத் தீர்மானித்திருந்தது. முதலியார்களின் குடும்பங்கள் மரபுவழியான நிலவுடையாளர்களாக இருந்தனர். இதனால் பொருளாதார பலம் மிக்கவர்களாக இருந்தனர். மக்ஸ் வெபரின் கருத்தின்படி "அதிகாரம் நிலைத்திருத்தலுக்கான விளைவாக பொருளாதார அதிகாரத்தின் எழுச்சி காரணமாக அமையலாம். மனிதர்கள் தம்மைத்தாம் பொருளாதார ரீதியில் செழுமைப்படுத்துவதில் மட்டும் அதிகாரத்துக்காக போட்டிபோடுவதில்லை. அதிகாரம் என்பது அதற்குரிய சொந்த மதிப்பாக பொருளாதார வலுவையும் உள்ளடக்கியதாக பெறுமானம் அளிக்கப்படலாம். வழமையாக சமூக கௌரவத்தினாலும் அதன் பயனாலும் தான் அதிகாரத்துக்கான போட்டி தொடரப்படுகின்றது". எல்லாவகை அதிகாரம் இல்லையாயினும், சமூக கௌரவத்தின் பயனாகவே முதலியார்கள் பொருளாதார பலம் மாத்திரமன்றி சமூக கௌரவம் மிக்கவர்களாக விளங்கினர். சுதேச பண்பாட்டு அம்சங்களைத் தங்களோடு இணைத்துக் கொண்டவர்களாக ஆங்கிலேயர் காலத்தில் அவர்கள் வாழ்ந்தனர். முதலியார்களின் சமூகப் பெறுமானத்தை சாதி, கல்வி, பொருளாதாரபலம், சமய ரீதியான கௌரவங்கள் என்பன தீர்மானித்திருந்தன. சாதி அதிகாரத்தைப் பேணும் மையங்களாக சமய நிறுவனங்கள் தொழிற்பட்டன. யாழ்ப்பாணத்தில்

சைவசமய மரபுகளைப் பின்பற்றும் குடும்பங்களி லிருந்து தான் முதலியார்கள் வந்தனர். "சமத்துவம் அற்ற அல்லது அடுக்கமைக்கப்பட்ட சமூகக் கட்டமைப்பினைஏற்கனவேதம்மகத்தேஉள்ளடக்கி விட்ட இந்து சமயத்துக்கு முன்பே பௌத்தம் ஆசுக்குறைந்தது மேற்பரப்புக்காயினும் சமத்துவக் கருத்து நிலைகளைக் கொண்டு வந்தது"[8] இந்தக் கருத்தின் பிரகாரம் சமூகத்தில் நிலவும் "ஏறுநிரல் கட்டமைப்பின்" (hierarchized social structure) ஒரு விளைபொருளாகத்தான் முதலியார்களை நோக்க முடியும். 19ம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னரும் முதலியார்கள் சைவசமயப் பின்னணியில் தான் தமது அதிகாரத்தினை நிலைநாட்டினர். 19ம் நூற்றாண்டிலும் அதன் பின்னரும் சைவத்திலிருந்து கிறிஸ்தவத்துக்கு மதம் மாறியவர்கள் கூட அதிகாரம் தரும் ஒரு அம்சமாகவே தமது மதமாற்றத்தினைக் கருதினர். அவ்வாறு மதம் மாறியவர்களின் சமூக அதிகாரத்தின் தொடர்ச்சித் தன்மை கிறிஸ்தவ சமயத்தினால் தீர்மானிக்கப்பட்டது. இதன் மூலம் முதலியார்களின் அதிகாரம், கௌரவம் என்பவற்றின் நிலைபேற்றினைத் தீர்மானிக்கும் அம்சமாகச் சமயம் விளங்கியதைப் புரிந்து கொள்ள முடியும்.

சமயம் மற்றும் பண்பாட்டு ரீதியான அடையா ளங்களோடு செல்வாக்குப் பெற்ற குறித்துச் செல்லக் கூடியசிலர்யாழ்ப்பாணசமூகத்தின்உருமாற்றத்தின் தனியாளுமை விசைகளாகத் தொழிற்பட்டனர். சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர். பொன் அருணாசலம் போன்றவர்களின் கல்வி, சமயம், அரசியல், ரீதியான செயற்பாடுகளுக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளில் ஒன்று பொன்னம்பல முதலியாரின் சமூக கௌரவமே. சேர். பொன். அருணாச்சலம் அவர்கள் Ceylon civil service (CCS) பரீட்சையில் 1875ல் இலங்கையிலிருந்து சித்திபெற்றமை முக்கியமான நிகழ்வாகும். " முதன்மையான தமிழ் குடும்பம் ஒன்றின் அங்கத்தவர் ஒருவர் பொன்னம்பலம் அருணாசலம், இந்தப் பரீட்சையில் சித்தியெய்திய ஒரே ஒரு இலங்கையின் தேர்வு நாடி. அவர் 1875 ல் சீ.சீ.எஸ். இல் நுழைந்தார்[9]." அத்துடன் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் நியமன அங்கத்துவரானமை முக்கியமானது. " 1879 ல் இலங்கைத் தீவின் தமிழ்பேசும் மக்களின் நியமன அங்கத்துவம் பெற்ற பிரதிநிதியாக முதலில் இராமநாதன் பொதுவாழ்வில் நுழைந்தார்[10]" இவர்கள் யாழ்ப்பாண சமூகத்தின் அன்றைய கால இயக்கத்தில் முக்கிய விசைகளாகத் தொழிற்பட்டனர். இந்த விசைகளின் எழுச்சிக்கான பின்புலம் சமயம், சாதி, பொருளாதாரம் என்ப வற்றுடன் பின்னப்பட்ட முதலியார் உயர் குழாமிலிருந்து உருவான ஒன்றாகும். அரசாங்கக் கடமைகளுடன் பிணைக்கப்பட்ட முதலியார் வகுப்பிலிருந்து தோன்றிய இத்தகைய ஆளுமைகள் யாழ்ப்பாண சமூகத்தின் அரசியல் மயப்படுத்தல் செயன்முறைகளின் பிதாமகர்களாயினர். இவர்களின் எழுச்சி சைவம், தமிழ் என்ற இரண்டு விடயங்களுடன் இணைக்காது பேசப்படுவதில்லை.

யாழ்ப்பாணத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 'முதலாளித்துவ தர்க்க நிலையுடன்' வளர்ந்த ஒரு பிரிவினர் இருந்தனர். இவர்கள் வர்க்க நிலையில் மத்தியதர வர்க்கத்தினராகவும், உயர்வர்க்கத்தினராகவும் விளங்கினர். அத்தகைய ஒரு வகுப்புநிலை உருவாவதற்கு பின்வரும் காரணிகள் பின்புலமாயின.

1. ஆங்கிலேயர் வழங்கிய கல்வியும் படித்த சுதேசிகளின் எழுச்சியும்
2. யாழ்ப்பாணத்தில்சுதேசிகளுக்கான உத்தியோக வாய்ப்புக்கள்.
3. யாழ்ப்பாணத்தவர்களின் வெளிநாடுகள் நோக்கிய பெயர்வுகள்.
4. வர்த்தக நடவடிக்கைகளிலான விரிவாக்கம்.
5. அரசியல் ரீதியான செயற்பாடுகள்

மேற்கண்ட காரணிகளால் தமது வாழ்வை மேல்நிலைப்படுத்திக் கொண்ட பிரிவினரின் வாழ்வு வர்க்கசமூகத்தின் பிரதிநிதிகளாக அவர் களை வெளிக்காட்டிய அதே வேளையில் 'உயர் குழாமினருக்கான' பண்புகளை வெளிப்படுத்தி யிருந்தது. 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' (1918) என்ற நூல் 'டைக்' (Dyke) என்ற அரச அதிபர் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் (1829-1869) சவரிமுத்துமுதலியார், கனகரத்தினம்

முதலியார் என்போர் கச்சேரியில் (மாவட்டச் செயலகம்) உத்தியோகம் பெற்றதாகவும், கோப்பாய் அம்பலவாணர் முதலியார் நீதிபதியாக உத்தியோகம் பெற்றதாகவும் கூறுகின்றது. யாழ்ப்பாணத்தில் கல்விகற்று உயர்ந்த இளைஞர் பலர் சிங்கப்பூர், மலாய் போன்ற நாடுகளுக்குச் சென்றதாலும் அவர்களின் உயர்குழாம் நிலை பேணப்பட்டது. 1855இல் வட்டுக்கோட்டை ஆங்கில மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற மு. வைத்திலிங்கம் என்பவர் தான் முதன் முதலாக சிங்கப்பூர் சென்றவர்[12] என்பது அறியப்படுகின்றது. இத்தகைய பெயர்வுகள் சுதேசிகளின் பொருளாதார மற்றும் அதிகார மையமான உயர்குழாமாதலுக்கு வழிவகுத்திருந்தது.

எனவே யாழ்ப்பாண சமூகத்தின் சமூக வரலாற்றில் தனித்துவம் வாய்ந்ததொரு உயர்குழாமினர் ஐரோப்பியர் ஆட்சிக்கு முன்பிருந்தே இருந்துவந்த போதிலும் ஐரோப்பியர் கால காலனித்துவ ஆட்சியில் அதன் இயல்புகள் மற்றும் இயக்க நிலைகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. இந்த மாற்றங்கள் ஆங்கிலேயர் ஆட்சியின் யாழ்ப்பாண சமூக உருமாற்றத்தை தூண்டிய பல்வேறு விசைகளினாலும் துரிதப்படுத் தப்பட்டன. சாதிய சமூகத்திலான உருமாற்றமும் வர்க்க சமூகத்தின் பண்புகளை நோக்கிய நகர்வும் சுதேச உயர்குழாமினரைத் தீர்மானிக்கும் காரணி களை மாற்றியமைத்தன. மரபார்ந்த சாதி, சொத்துரிமை, சமயம் போன்ற காரணிகளின் வழிவந்த உயர்குழாம் அதிகாரமானது கல்வி, அரசதொழில், மதமாற்றம், வணிக முயற்சிகள், புலப்பெயர்வுகள், அரசியல் கலாசார வளர்ச்சி போன்றவற்றோடு இணைந்து உருமாற்றம் பெற்றது. இந்த உருமாற்றத்தின் ஒரு சிறு வெட்டுமுகத்தினைப் புலப்படுத்த இக் கட்டுரை உதவும்.

**அடிக்குறிப்புக்கள்:**

1. Singh, Yogendra (2001), *Modernization Indian Tradition,* New Delhi: Rawat Publication, p: 130.
2. *Ibid.*
3. பத்மநாதன், சி (2001), *இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும்,* கொழும்பு: குமரன் பதிப்பகம், ப: 83.
4. Peebles Patrick (1995), *Social change in nineteenth century Ceylon.* New Delhi: Navarang. p: 25.
5. ஜெயவர்த்தனா குமாரி (2009), அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களானமை இலங்கையின் முதலாளித்துவத்தின் தோற்றம் (தமிழ் மொழியாக்கம்: க. சண்முகலிங்கம்), கொழும்பு: குமரன் பதிப்பகம், முன்னுரையிலிருந்து ப:xiii
6. சமூக விஞ்ஞானிகள் சங்கம் (1984), *இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும்,* ப: 147.
7. Peebles Patrick (1995), *Social change in Nineteenth century Ceylon,* New Delhi. Navarang, p:119.
8. Hettige, S.T (1984), *Wealth, power and prestige: emerging patterns of Social inequality in a peasant context,* Sri Lanka: Ministry of Higher Education, p:33.
9. Peebles Patrick (1995) , *Social change in nineteenth century Ceylon,* New Delhi: Navarang, p: 237.
10. Vaithilingam, M(1977), *The life of Sir. Ponnambalam Ramanathan,* Vol II, Sri Lanka, Chunnaham, p:05
11. வேலுப்பிள்ளை, க(1918), *யாழ்ப்பாண வைபவ கௌமுதி,* ஜெயஸ்ரீ சாரதா, யாழ்ப்பாணம், ப: 294
12. மேலது ப: 295.